பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 03 2024 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவின்போது மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய வசதிகள் ஏற்படுத்தித்தருவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

2. மகளிர் நலனுக்காக பல்வேறு திட்டங்களை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

3. இளையோருக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தர பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

4. ரஷ்யாவில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

5. சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*----- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலின்போது வாக்குச்சாவடிகளில் போதிய வசதிகள் ஏற்படுத்தித்தருவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக, மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் வாக்குச்சாவடி மையங்களில் ஏற்படுத்தியிருப்பதை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் நாடு முழுவதும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்தியப்பிரதேசத்தில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனைகளின்போது இதுவரை 14 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த மாநிலத்தில் நான்கு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

முதல் கட்ட வாக்குப்பதிவு அடுத்த மாதம் 19-ஆம் தேதியும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு அடுத்த மாதம் 26-ஆம் தேதியும், மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு மே மாதம் 7-ஆம் தேதியும், நான்காவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு மே மாதம் 13-ஆம் தேதியும் நடைபெறும்.

ஐந்து கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்தவுள்ளனர்.

மகாராஷ்ட்ராவில் அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில், கூடுதல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு சொக்கலிங்கம் கூறியுள்ளார்.

நாக்பூரில் இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

வாக்காளர்கள் வாக்களிப்பதை தேசிய கடமையாக கருத வேண்டும் என்றும், திரு சொக்கலிங்கம் கேட்டுக்கொண்டார்.

திரிபுராவில் உள்ள இரண்டு மக்களவைத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

திரிபுரா மேற்கு தொகுதிக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 19-ஆம் தேதியும், திரிபுரா கிழக்குத் தொகுதிக்கான வாக்குப்பதிவுஅடுத்த மாதம் 26-ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி, பிஜேபி மற்றும் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்கட்சிகளின் தலைவர்கள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமிழகத்திலும் மக்களவைத் தேர்தல் தொடர்பான முன்னேற்பாட்டுப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தற்போது சென்னையில் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

மாநிலத்தில், இதுவரை 12 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்களை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் தேர்தல் அலுவலர்களுக்கான முதல் கட்ட பயிற்சி இன்று தொடங்கியது.

மூன்று கட்டங்களாக இந்த பயிற்சி நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - லஷ்மணன் - 50 செகண்ட்ஸ்)*

முதல் முறை வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று திண்டுக்கல் காந்தி கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழக பொறுப்பு பதிவாளர் திரு ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

*(சவுண்ட் பைட் - பதிவாளர் - 34 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

மகளிர் மேம்பாட்டிற்காக தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

மக்களவையிலும், மாநிலங்களின் சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதா நிறைவேற்றப்பட்டதை அக்கட்சி அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

மத்திய அரசு செயல்படுத்திய திட்டங்கள் மூலம் அனைத்துத்தரப்பினரும் பயனடைந்திருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிஜேபி-க்கான மக்கள் ஆதரவு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பிஜேபி-யின் மத்திய தேர்தல் குழுக்கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர்களை இறுதி செய்வது குறித்து இதில் ஆலோசிக்கப்படவுள்ளது.

<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வெற்றிபெற்றால், வேளாண் விளைப்பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கும் நடைமுறைக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கப்படும் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இயற்கை பேரிடரால் பாதிக்கப்படும் வேளாண் பயிர்களுக்கு 30 நாட்களுக்குள் இழப்பீடு வழங்கப்படும் என்று அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

விவசாயிகளின் நலனை உறுதி செய்யும் வகையில் ஏற்றுமதிக்கொள்கை வகுக்கப்படும் என்றும் காங்கிரஸ் அதில் குறிப்பிட்டுள்ளது.

இளையோருக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தர பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாகவும் காங்கிரஸ் அந்த அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது.

<<<<<>>>>>>

ரஷ்யாவில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் கண்டனம் தெரிவித்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, இதில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

மாஸ்கோவில் நடைபெற்ற இந்த தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு ஐ நா-வும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த தீவிரவாத தாக்குதல் சம்பவத்தில் 60 பேர் உயிரிழந்தனர், 145-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு ஐ எஸ் ஐ எஸ் பொறுப்பேற்றுள்ளது.

<<<<<>>>>>>

சோமாலியாவை சேர்ந்த 35 கடற்கொள்ளையர்களை இந்திய கடற்படை கைது செய்துள்ளது.

இவர்கள் மும்பை காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக கடற்படையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

சத்தீஸ்கரில் நக்சலைட்டுகள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப்படையினர் இரண்டு பேர் காயமடைந்தனர்.

தண்டேவாடா பகுதிக்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்புப்படையினர் கண்காணிப்பு பணியை மேற்கொண்டிருந்தபோது நக்சலைட்டுகள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

நாடு முழுவதும் 20 பள்ளிகளின் அங்கீகாரத்தை சிபிஎஸ்இ ரத்து செய்துள்ளது.

உரிய நெறிமுறைகளை கடைபிடிக்கவில்லை என்று கூறி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சிபிஎஸ்இ-யின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தில்லியில் மட்டும் ஐந்து பள்ளிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வு மற்றும் அதுதொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகாந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-10, 21-14 என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் **Chia Hao Lee** -ஐ வென்றார்.

<<<<<>>>>>>

போலந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Aishmita Chaliha** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், அவர் 21-15, 21-17 என்ற செட் கணக்கில், மெக்சிகோவின் **Haramara Gaitan** –ஐ வென்றார்.

இதர மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில், **Anupama Upadhyaya, Imad Farooqui Samiya, Tanya Hemanth** ஆகியோர் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Meiraba Luwang Maisnam, Darshan Pujari,** ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Arathi Sara Sunil – Varshini Viswanath Sri** இணையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் **Arjun -Dhruv Kapila** இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<<>>>>>

**Murcia** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - **Arjun Kadhe** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 7-6 என்ற செட் கணக்கில், போர்ச்சுக்கல்லின் **Francisco Cabral - Henrique Rocha** இணையை வென்றது.

<<<<<>>>>>

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

மொஹாலியின் **Tira** -வில், பிற்பகல் மூன்றரை மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

இரவு மணி 7.30-க்கு கொல்கத்தாவில் நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் கொல்கத்தா - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<END>>>>>>